முருகப்பெருமான் துணை

**மகான் கழறிற்றறிவார் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.02.2023, புதன்கிழமை

1. தவசியே தருமவழிகாட்டுகின்ற
தருமனே ஆறுமுக அரங்கனே
அவனியில் உன்பெருமை கூறி
அறிவிக்க சுபகிருது சால் திங்கள்
2. திங்களிலே சூலதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 03 ம் நாள் 15.02.2023, புதன்கிழமை)
தேசிகனுக்கு அனுகூல ஆசிதனை
இங்கனமே கழறிற்றறிவார் யானும்
இயம்பிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்பெற அரங்கமகான் காட்டும்
ஞானவழிகளை ஏற்றுவர
பலம்பெற்று கலியுகமக்களுக்கு
பரிபக்குவம் சகலவளமும் காண்கும்
4. காண்கவே கலித்துன்பம் என்கிற
கட்டுப்பாடில்லா மாயை வழிகளை
உண்மைபட வென்று உயரவே
உலகோர் அரங்கனுபதேசமாம்
5. ஆமென ஞானிகளை வணங்கிட
ஆறுமுகனாரின் சடாட்சரமந்திரம்
ஓமென முன்னில் இணைத்து
ஒவ்வொரு நாளும் உருதனை ஏற்றிட
6. ஏற்றிட எல்லா வகைதனிலும்
இடர்களை வெல்லும் தன்மை
ஆற்றலாகக் கூடி இனிதே
அனைவரும் தேற்றம் காண்பர்
7. காண்கவே இந்தவித மாற்றம்
கட்டாயம் சமூக மாற்றமாக
உண்மை ஞானம் நிறைந்தநல்
உயர் ஆன்மீகமாக மாற்றமாகி
8. ஆகியே ஞானவான்கள் படை
அகிலமெங்கிலும் பெருகி
மகிழவே ஞானத் தலைமைகளை
மக்கள் தேர்ந்தெடுக்கும் வண்ணம்
9. வண்ணமுடன் சூழல் கனிந்து
வருங்காலம் ஞானிகள் ஆசிபட
எண்ணம்தனில் அரங்கமகான்
இணைந்து எல்லோருக்கும் இனிதே

10. இனிதே குருவாய் அருள
எதிலும் தயவு நிரம்பிட
கனிவேலன் சூட்சுமமாகவே
கலிதனில் இறங்கி அருளிட

11. அருளிட ஞான ஆட்சி
அறிவிப்பேன் அகிலம் அடையும்
அருளிட மக்களுக்குப் பாதுகாப்பு
ஆளுமையால் கண்டுத் தேறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–